Approved by the Text-Book Committee, Madras

229

# பால ராமாயணம்

(திருத்தப் பதிப்பு)

WITH THE COMPLIMENTS OF THE PUBLISHERS
Dated..............

இயற்றியவர் :
ஸ்ரீமதி பி. மங்களா பாய்,
கார்ப்பொரேஷன் பெண் பாடசாலை உபாத்தியாயனி,
சென்னை.

சென்னை-30

வி. எஸ். வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்

உரிமை பெற்றது] [விலை அணா 4

R-108

# பால ராமாயணம்

(திருத்தப் பதிப்பு)

துரைத்தனத்தார் அங்கீகரித்தது
(24-4-'34 கெஜட்டின் 225-ம் பக்கம் பார்க்க)

வி. எஸ். வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்

உரிமை பெற்றது]

[விலை அணு 4

*First Edition, 1934.*

*Second Edition, 1935.*




PRINTED AT
THE ROYAL PRINTING WORKS,
MOUNT ROAD, MADRAS.

# முன்னுரை

பால ராமாயணம் என்னும் இச் சிறு நூல் இராமாயணக் கதையைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் தெரிவிக்கின்றது. இதன் ஆசிரியர்களாகிய ஸ்ரீமதி பி. மங்களா பாய் அம்மாளவர்களும், திருவாளர் வி. சங்கரலிங்கம் பிள்ளை பி. ஏ., எல். டி., அவர்களும் இராமாயணக் கதையை நன்கு உணர்ந்து எழுதியிருக்கிறார்கள் என்பது வெளிப்படை. இது துரைத்தனத்தாரால் அங்கீகாரம் பெற்றிருக்கிறது. ஆகவே, இது சிறுவர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்னும் கருத்துடையேன்.

'கடலகம்'
மயிலை, சென்னை.

கா. நமச்சிவாயன்



# பால ராமாயணம்

## 1. பால காண்டம்

[இராமருடைய பாலப் பருவத்தில் நடந்த வரலாற்றைக் கூறியிருப்பதால், இதற்குப் பால காண்டமென்று பெயர்.]

சரயு நதி தீரத்தில் அயோத்தி என்னும் அழகு வாய்ந்த நகரொன்றுண்டு. மிகப் பழைய காலத்தில் இக்ஷ்வாகு என்னும் அரசரொருவர் முதன் முதல் இவ்விடத்தில் இராஜ்யத்தை நிலை நிறுத்தி அரசாண்டு வந்தார். அவர் வழியில் வந்த அரசர்களை இக்ஷ்வாகு குலத்தரசர்களென்பார்கள். புகழ் வாய்ந்த இவ் இக்ஷ்வாகு குலத்தில் திலீபர், அஜர் முதலிய பல அரசர் மனுநெறி தவறாது செங்கோல் செலுத்திவந்தனர். இவர்களுக்குப் பிறகு தசரதர் என்பவர் வெகு மேன்மையாக அரசாட்சி செய்துவந்தார்.

தசரதருக்கு எல்லாச் செல்வங்களும் அமைந்திருந்த போதிலும், பிள்ளைப் பேறு

இல்லையென்கிற ஒரு மனக்குறை மட்டும் இருந்து வந்தது. தசரதருக்குக் கௌசல்யை, கைகேயி, சுமித்திரை என்ற மூன்று அரசிமார் கள் இருந்தனர். இம் மூவரில் ஒருவருக்காவது ஆண் மகவு பிறக்க வேண்டுமென்று தசரதர் நோற்ற நோன்புகளும், செய்த வேள்விகளும் எண்ணிறந்தவை. பிறகு கடவுள் அருளால் கௌசல்யைக்கு இராமரும், கைகேயிக்குப் பரதரும், சுமித்திரைக்கு இலட்சுமணர், சத் துருக்கனர் என்ற இருவரும் ஆக நான்கு குமாரர் கள் பிறந்தார்கள். அதனுல் அரசனும் குடிகளும் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தனர். குழந்தை கள் பிறந்த தினத்தன்று மிகுந்த சிறப்புடன் பிறப்பு விழா நடந்தேறியது.

சித்திரை மாதம், வளர்பிறை நவமியன்று இராமர் பிறந்தன ராகையால், அத்தினம் இராமநவமி என்று வழங்கப்படுகிறது. ஆண்டு தோறும் இத்தினத்தில் ஜனங்கள் இராமர் பிறப்பு விழாவைக் கொண்டாடி வருகிருர் கள்.

## கல்விப் பயிற்சி

அரசகுமாரர் நால்வரும் நாளொரு மேனி யும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து மெல்ல மெல்லப் பேசவும் நடக்கவும் தொடங் கவே எல்லோரும் கண்டு களிக்கலாயினர்.

இவர்கள் ஒருமிக்கச் சேர்ந்து உண்பதும் விளையாடுவதுமாக இருந்து வந்தபோதிலும் இலட்சுமணர் இராமர் மீதும், சத்துருக்கனர் பரதர் மீதும் அன்பு மிகுந்தவரா யிருந்தனர்.

இந்நால்வரும் இளமைப் பருவந்தொட்டே மிக வணக்க ஒடுக்கத்துடன் தாய், தந்தையர்களுடைய கட்டிற் கடங்கினவர்களா யிருந்தனர். இப் பாலகர்களுக்கு ஐந்து வயதானபொழுது வசிஷ்ட மாமுனிவர் எழுதப் படிக்கக் கற்பித்து, இலக்கணம், காவியம், நீதிநூல் முதலிய கலைகளையும் முறையே கற்பித்தனர். அவற்றோடொப்ப, தேகப் பயிற்சி, குதிரைச் சவாரி, வில் வித்தை முதலியவற்றையும் கற்பித்தனர். இவ்வாறாக மூளைக்கும், தேகத்திற்கும் தகுந்த பயிற்சி பெற்றதினால் அரசகுமாரர்கள் புத்தியிற் சிறந்தவர்களாகவும், க்ஷத்திரியர்களுக்குரிய வீரம் படைத்தவர்களாகவும் விளங்கினர்.

## விசுவாமித்திரர் வருகை

இராஜகுமாரர்கள் கல்வியிலும் வில் வித்தையிலும் தேர்ச்சி யடைந்ததைப் பார்த்துத் தசரத மகாராஜருக்கு மட்டற்ற மகிழ்ச்சியுண்டாயிற்று. அவர் குமாரர்களிடத்தில் அதிக அன்பு பாராட்டலாயினர். இவ்வாறிருக்க, விசுவாமித்திர முனிவர் என்பவர் ஒரு நாள் தற்செயலாய்த் தசரதரை நாடிவந்தார். தசரதர் அவ்வருந்தவ முனிவரை வரவேற்றுப் பீடத்

தின்மீது வீற்றிருக்கச் செய்து, வந்தனை வழி பாடுக ளெல்லாம் செய்து நின்றார். அப் பொழுது விசுவாமித்திர முனிவர் அரசரை நோக்கி, "இராஜனே! நான் யாகம் செய்யப் போகிறேன். கொடிய அரக்கர்களால் இடையூறு வராது காக்கும்பொருட்டு, வில் வித்தை



யில் நிபுணரான, இராம லட்சுமணர்களை என்னுடன் அனுப்புவாயாக. இதைக் கேட்பதற் காகத்தான் வந்தேன்" என்று சொன்னார்.

இதனைச் செவியுற்றதும் மைந்தரைப் பிரிய மனமில்லாதவ ராகிய தசரதர் பெருந் துக்கத்தி லாழ்ந்து திகைக்கலானார். அருகிலிருந்த குரு வாகிய வசிஷ்டர் அவரைத் தேற்றி விசுவாமித்

திரர் வேண்டுகோளைப் பூர்த்தி செய்வதால் பல நன்மைகள் உண்டாகுமென்று வற்புறுத்திய தின்பேரில் அனுப்ப ஒப்புக்கொண்டார். பிதாவின் கட்டளைப்படி இராம லட்சுமணர் இருவரும் அம்பு வில் கைப்பிடித்துப் பெரியோர்களின் ஆசீர்வாதம் பெற்று விசுவாமித்திரரைப் பின் தொடர்ந்தனர்.

## தாடகை வதம்

முன்னால் விசுவாமித்திரரும், பின்னால் இராம லட்சுமணருமாக வழிநடந்து மலைகள், ஆறுகள் எல்லாம் தாண்டி, ஓர் கானகத்தில் வந்து சேர்ந்தார்கள். இக் கானகத்தில் தாடகையென்றொரு அரக்கி வசித்துக்கொண் டிருந்தாள். ஜம்பாசுரனுடைய மகளும், சுந்தனுடைய மனைவியுமாகிய இவளுக்குச் சுபாகு, மாரீசனென்னு மிரு குமார ருண்டு. அவர்கள் மிக்கத் திறமையும், வலிமையு முடையவர்கள். தாடகையும், புதல்வரும் முனிவர்களைத் துன்புறுத்தி யாகங்களுக்கு இடையூறு செய்து வந்தார்கள். இராமர், இலட்சுமணர், விசுவாமித்திரர் மூவரும் காட்டில் நுழைந்தபோது தாடகையினுடைய பயங்கரமான குரல் கேட்டது. அப்பொழுது அவளைக் கொன்றுவிடும்படி விசுவாமித்திரர் இராமரை வற்புறுத்தினர். அதற்கு இராமர் அவள் பெண்ணானகையால் அவளைக் கொல்வது க்ஷத்திரிய தருமத்திற்கு

விரோதமாகும் என்று சொல்லவே, விசுவாமித்திரர் "தீவினை செய்யும் பெண்களையும், குற்றமுள்ள பெண்களையும் தண்டிப்பதால் க்ஷத்திரியர்களுடைய தருமத்திற்கு இழிவு இல்லை" என்று சொல்லவும், அவ்வாறாயின் சரியென்று இராமர் முனிவர் சொன்னபடியே, தாடகையைக் கொன்றார். அதன் பிறகு இராமர் கௌதம முனிவருடைய மனைவியாகிய அகலிகை என்பவள் சாபத்தினால் சிலையாய்க் கிடந்திருந்தவளை எழுப்பினர். பிறகு மூவருமாகச் சித்தாச்சிரமத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அவ்விடத்தில் விசுவாமித்திரரை யாகந் தொடங்கச் சொல்லி, இராம லட்சுமணரிருவரும் பாதுகாத்துக்கொண் டிருந்தார்கள். இவ்வாறாக ஐந்து நாள் கழிந்த பிறகு மாரீசன், சுபாகு முதலிய அரக்கர்கள் இடையூறு விளைக்கலாயினர்.

அப்பொழுது இராமர் சரமாரி பொழிந்ததில், மாரீசன் பயந்தோடினான்; சுபாகு இறந்து விழுந்தான்; மற்றும் சில அரக்கர்களும் மரித்தனர்.

இவ்வாறு இராமரால் தமது இடையூறு நீங்கி வேள்வி முடிவுற்றதற்காக மகிழ்ந்த முனிவர் அவரைப் புகழ்ந்து ஆசீர்வதிக்கலானார். மேலும், அம்முனிவர் இராமருக்குப் பல அரிய பாணங்களையும் கொடுத்தார்.

## சீதா கல்யாணம்

மறுநாட் காலை, நீராடி உணவருந்திய பின்பு விசுவாமித்திரர் இராம லட்சுமணரை நோக்கி, "மிதிலை நகரில் ஜனக மகாராஜன் அரண்மனையில் பெரிய யாகமொன்று நடக்கப் போகிறது ; நாங்கள் எல்லோரும் அவ்விடம் போகவேண்டும். நீங்களும் எங்களுடன் வாருங்கள். அவ்வரண்மனையில் மிகப் பென்னம் பெரிய வில் ஒன்றுளது. தேவர், தைத்தியர், அரக்கர் முதலியவர்களில் ஒருவருக்கும் அதை அசைக்க முடியவில்லை" என்று சொல்லவே, இராம லட்சுமண ரிருவரும் அதைக் காணும் ஆவலால், முனிவருடன் புறப்பட்டார்கள்.

விசுவாமித்திரர் மற்றும் அநேக முனிவர் களை அழைத்துக்கொண்டு, இராம லட்சுமண ருடன், புண்ணிய ஸ்தலங்கள் தோறும் தங்கித் தங்கி முடிவில் ஜனகராஜனுடைய நகரத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கு இன்னும் வேறு அரசர்களும், முனிவர்களும் வந்திருந்தார்கள்.

இவர்களுடைய வரவை அறிந்ததும் ஜனக மகாராஜன் தன் குருவாகிய சதாநந்தருடன் இவர்களை எதிர்கொண்டு நல்வரவு கூறி அழைத்து வந்தார். இராம லட்சுமணருடைய நிகரற்ற வடிவழகையும், ஒளியையும், ஆண்மை

யையுங் கண்டு திகைத்து "இவர்கள் யாருடைய குமாரர்கள்?" என்று ஜனக மகாராஜன் விசுவா மித்திரரைக் கேட்கையில், அவர்கள் தசரத மகாராஜனுடைய குமாரர்களென்றும், இவ் விளம் வயதிலேயே இராட்சதர்களைக் கொன்று தன் யாகத்தைக் காத்தவர்களென்றும் சொல்லி, "இவர்கள் நீர் செய்யும் வேள்வியைக் காணும் பொருட்டு வந்திருக்கின்றனர்; அரண்மனையி லுள்ள வில்லையும் ஒரு கை பார்ப்பர்" என்று தெரிவித்தார்.

இவ்வாறாக அவர்கள் பேசிய பிறகு ஜனக மகாராஜன் தன் அத்தாணி மண்டபத்திற்கு அவர்களை யழைத்துச் சென்றான். அங்கு மேற் கூறிய சிவ தனுசை வரவழைத்து, எழுந்து நின்று, "நிலம் உழுதுகொண்டிருக்கையில் நிலத்தினின்றும் கிடைத்த பெண்மணியை, நான் சீதை என்று பெயரிட்டு வளர்த்து வரு கிறேன். அவள் இப்பொழுது விவாகத்திற் குத் தக்கவளாயிருக்கிறபடியால் அவளை நாடிப் பற்பல அரசர்கள் வந்திருக்கிறீர்கள். உங்க ளில் எவர் இவ் வில்லை வளைக்கின்றனரோ, அவருக்கு என் புதல்வியைக் கொடுப்பேன். இதுவரையில் பலர் முயன்றும் முடியவில்லை" என்றான். இதைச் செவியுற்றதும் விசுவாமித்தி ரர் இராமரை நோக்கி, வில்லை வளைக்கும்படி குறிப்பினால் அறிவித்தார். இராமர் எழுந்து

சபையோர்கள் முன், வருத்தமின்றி வில்லைக் கையிலெடுத்து வளைக்கவே, அது நடுவில் முறிந்து இரண்டு துண்டாயிற்று. அதைக் கண்ட சபையோர்களனைவரும் அவருடைய



சாமர்த்தியத்தைப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

தனக்கு இப்படிப்பட்ட பராக்கிரமசாலியான மருமகன் கிடைத்ததற்காக ஜனக மகாராஜனும் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். பின் விசுவாமித்திரருடைய ஏவலின்படி உடனே

தசரத மகாராஜருக்குச் சகல விருத்தாந்தத்தையும் தெரிவித்துப் புத்திரருடைய விவாகத்திற்கு அவரைப் பரிவாரங்களுடன் அழைத்து வர ஓர் மந்திரியை அனுப்பினார். ஜனக மகாராஜனனுப்பிய செய்தியைக் கேட்டுத் தசரத மகாராஜா மிகவும் களிப்புற்று மிக்க ஆடம்பரத்துடன் மிதிலைக்கு வந்து சேர்ந்தார். ஜனக மகாராஜனும் தசரதரைத் தக்கவண்ணம் வரவேற்று உபசரித்து, இராமர் சீதை இவர்களுடைய திருமணத்தை வெகு சிறப்பாயும் விமரிசையாயும் நடத்தினார். அத்துடன் ஜனகருடைய மற்றொரு மகளாகிய ஊர்மிளையை இலட்சுமணருக்கும், அவர் சகோதரராகிய குசத்துவஜருடைய இரண்டு புத்திரிகளில் மூத்தவளாகிய மாண்டவி என்பவளைப் பரதருக்கும், இளையவளாகிய சுருதகீர்த்தி என்பவளைச் சத்துருக்கனருக்கும் கொடுத்து விவாகம் செய்வித்தார்.

## பரசுராமர் கர்வ பங்கம்

திருமண விழா முடிந்த பிறகு தசரத மகாராஜா, நான்கு புத்திரர்களுடனும் மருமக்கள் மார்களுடனும் அயோத்திக்குத் திரும்பி வருகையில், ஜமதக்கினி முனிவரின் குமாரராகிய பரசுராமர் என்பவர் பரசு என்கிற ஆயுதத்துடனும், அம்பு வில்லுடனும் வந்து கோபங்

கொண்டு இராமரை எதிர்த்து, “இராமா! நீ சிவ தனுசை வளைத்துவிட்டதாகப் பெருமை பாராட்டிக்கொள்கிறாய்; அது முன்னமே யொடிந்து போன வில்; அதை வளைத்ததினால் நீ யுண்மை யான ஒரு வீரனாகமாட்டாய்; இதோ என் கையி லிருக்கும் இவ் வில்லை வளைத்து உன் ஆண் மையை நிலை நாட்டு. இன்றேல் உன் ஆண் மையை நான் பங்கப்படுத்துவேன்” என் றிவ்வாறு கூற, இராமர் அவ் வில்லை வாங்கி வளைத்துப் பாணம் தொடுத்தனர். இதைக் கண்ணுற்ற பரசுராமர் இராமரைப் புகழ்ந்து விடைபெற்றுச் சென்றார். தசரதர் ஆனந்தத் துடன் அயோத்திக்குப் போய்ச் சேர்ந்ததும், இராஜபுத்திரர்களுடைய விவாகத்தின் நிமித்தம் நகரமெங்கும் மகிழ்ச்சி கொண்டாடப் பெற் றது. பிறகு சிறிது நாட்களில் பரதர் தன் பாட்டனார் வீட்டிற்குச் செல்ல அவருடன் சத் துருக்கனரும் சென்றார்.

——

# 2. அயோத்தியா காண்டம்

[விவாகத்தின் பின் இராமர் வனத்திற்குச் செல்லும் வரையில் அயோத்தியில் நடந்த செய்திகளைக் கூறுவதால், இதற்கு அயோத்தியா காண்டமென்று பெயர்.]

## முடி புனையும் யோசனை

இராமர் தன் பராக்கிரமத்தினாலும், நற்குணங்களினாலும் எல்லோருடைய அன்பையும் பெற்றார். அவர் எப்பொழுதும் மதுரமாகப் பேசுவார்; கடினமான சொற்களால் பிறர் மனம் நோகுமாறு ஒருநாளும் பேசமாட்டார்; எல்லோரிடத்தும் வணக்கமாயிருப்பார்; அவருக்கு எள்ளளவும் கர்வமென்பதே கிடையாது; எல்லோரிடத்தும் தயவாயிருப்பார்; ஒருநாளும் பொய்பேசத் துணியார்; எக்காலமும் பிறரை மகிழ்வித்துத் தானும் மகிழ்ந்திருப்பார்; எப்பொழுதும் அறநெறியில் நடப்பார்; தீயாருறவென்பதே அவரறியார்; ஒருவரையும் கோபித்துக் கொள்ளமாட்டார்; ஊக்கத்துடன் வினை முயலுவார். அவர் அறிவிலும் தேக பலத்திலும் எவ்வளவு வல்லவரா யிருந்தனரோ, அவ்வாறே உலக விவகாரத்திலும் வல்லவரா யிருந்தார். எந்த விடத்தில் எந்தச் சமயத்தில் எவ்வாறு பேசல்வேண்டும், எவ்வாறு நடந்து கொள்ளல்வேண்டும் என்பவைகளை எல்லாம் நன்றாக அறிவார். பயனற்ற பேச்சுக்களைப்

பேசுவது, பிறரை நிந்திப்பது, பரிகசிப்பது முதலியவைகளை அவர் முற்றிலும் அறியார். அவருடைய குணம் இவ்வளவு மேன்மையாக இருந்ததினாற்றான் குடிகள் அவரை நேசித்து வந்தது மல்லாமல் அவரே தமக்கு அரசனா யிருக்கவேண்டு மென்றும் விரும்பினர்.

இஃதொன்றும் புதுமையன்று. மூத்த மகனான அவருக்கு இளவரசுப் பட்டம் கிடைப்பது மரபே. இராமர் இளவரசனாக வேண்டு மென்கிற எண்ணம் குடிகளுக்கு உதிப்பதும் இயற்கையே. ஆனால் தசரதருடைய கருத் தென்ன வென்றால், தன் கண்ணுக்கு முன் பாகவே இராமருக்குப் பட்டம் சூட்டி, தான் அரசாட்சியின் பொறுப்பை விட்டுத் தவமியற் றப் போகவேண்டு மென்பதே. இதுபற்றிப் பிர தானிகளிடமிருந்தும், பிரஜைகளிடமிருந்தும் சம்மதம் பெற்று, இராமருக்கு முடிசூட்ட நிச்ச யித்து அதற்கு வேண்டியவனைத்தும் சித்தப் படுத்தக் கட்டளையிட்டார்.

எல்லாப் பொருள்களும் சித்தமாயின. தசரதர் இராமரைக் கூப்பிட்டு, "இராமா! நீ முதற் குமாரனாயிருந்து உன் குணத்தினால் குடிகளை மகிழ்வித்திருக்கிறாய். நானும் நிரம்ப முதுமைப்பருவ மடைந்திருக்கிறபடியால் இன் னும் சில தினங்களில் உனக்குப் பட்டம் சூட்டக் கருதுகிறேன். நீ புத்திமானாயிருக்கிறாய். நீ

சகலமும் அறிந்துணர்ந்தவன். இருந்தபோதி லும் அரசு முறையைப்பற்றி ஏதோ இரண் டொரு வார்த்தை சொல்லுகிறேன். அதை நீ கவனிப்பாயாக. "அரசாட்சியைச் சார்ந்த வேலைகளனைத்தும் சுயமாகப் பார்த்துக் குடிக ளுடைய நிலைமையை நன்குணர்ந்து நியாய மாய்ப் பரிபாலிப்பதுதான் அரசர்களுடைய சிறந்த தருமம். அதைப்போலவே சேனைகளை அடக்குவதும், தீயாரைக் கண்டித்துக் கட்டுப் பாட்டில் வைப்பதும் அரசர் கடமையாயிருக்கி றது. காரணமின்றிப் பிறரை ஒறுத்தல் கூடாது. சரணமடைந்தவரைக் காக்கவேண்டும். இராஜ் யத்தில் தத்தம் கடமைகளை யாவரும் சரிவர நிறைவேற்றும்படி வற்புறுத்த வேண்டும். துக்கப்படுகிறவர்களைத் தேற்றி இன்புறுமாறு செய்யவேண்டும். பிறரை நிந்திப்பதும், தன் பெருமையையே பேசுவதும் கூடாது. பிறர் பொருளை விரும்பலாகாது. ஏனென்றால் இவ் விருப்பம்தான் தீங்கிற்குக் காரணமாகும். உயிர் கள்மீது இரக்கங் காட்டவேண்டும். நன்னடக் கை யுள்ளவனுயிருந்து நல்லோரை ஆதரிக்க வேண்டும். குடிகளைத் தம் குழந்தைகள் போல் பாவித்து, அவர்களுடைய சுகமே தனது சுக மாகவும், அவர்களுடைய துக்கமே தனது துக்கமாகவும் எண்ணி, உலகையாள்வதே ஒரு அரசனுக்குப் புண்ணியமும் புருஷார்த்தமு

மாகும்" என்று போதித்தார். இவற்றை எல்லாம்கேட்டு இராமர், 'தங்கள் உபதேசத்தின்படி நடந்துகொள்ளச் சித்தமாயிருக்கிறேன்' என்று தசரதருக்கு வணங்கி மொழிந்து உத்தரவு பெற்றுத் தாயினிடம் சென்று நடந்த சங்கதிகளனைத்தும் தெரிவித்து, அவளிடத்தும் இளைய தாய்மாரிடத்தும் ஆசீர்வாதம் பெற்றுத் தம் மாளிகைக்குச் சென்றார்.

### முடி சூட்டுதற்கு இடையூறு

அயோத்தி மாநகர் முழுவதும் மங்கள வாத்தியங்கள் முழங்கிக்கொண்டிருந்தன. நகரத்திலுள்ள ஜனங்களெல்லாம் பட்டாபிஷேகத்தைப்பற்றி மகிழ்வுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். மங்கையர்களெல்லாம் விலையுயர்ந்த ஆடை யாபரணங்க ளணிந்து இராமரைக் காண்பதற்காக ஜன்னல்கள்தோறும் காத்திருந்தனர். அயல் நாடுகளிலிருந்தும் எண்ண முடியாத ஜனங்கள் முடிசூட்டு விழாவைக்காண வந்திருந்தனர். அயோத்தி மாநகர் முழுவதும் சமுத்திர மணல்போல் ஜனக்கூட்டத்தால் நிறைந்திருந்தது.

இவ்வாறிருக்கையில், மந்தரை என்னும் கைகேயியினுடைய தாதி யொருத்தி இந்த உற்சவத்தின் காரணத்தை அறிந்து பொறாமை கொண்டு, படுத்துக்கொண்டிருந்த கைகேயியினருகிற் சென்று, "கைகேயி! எழுந்திரு.

இதென்னடீ! இப்படிப் படுத்துக்கொண்டிருக்கிருய்! ஆபத்துக் காலம் இவ்வளவு நெருங்கியிருக்கிறது. உனக்குக் கண் தெரியவில்லையா? என்ன சொல்லட்டும்! இராமனுக்குப் பட்டாபிஷேகம் நடக்கப்போகிறது. நீ கவலையின்றிப் படுத்துக்கொண்டிருக்கிருயே. இராஜன் உன்னிடத்தில் கபடமாய் நடந்துகொள்வது உனக்கேன் தெரியவில்லை? அடி! உன் மகனுக்கு இராஜ்யம் கிடைக்கக்கூடாதென்று அவனைப் பாட்டனூர் வீட்டிற்கு அனுப்பிவிட்டார். கௌசலையினுடைய குமாரன் நாளைக்குப் பட்டத்திற்கு வந்துவிட்டானுல், அவளுக்கு முன்பாக நீ தாதியாகவன்றே நிற்க வேண்டும். உன் குமாரன், இராமனுக்கு ஊழியம் செய்ய வேண்டிவருமே'' என்ருள். மந்தரையின் கோபாவேசத்தைக் கண்டு கைகேயி சாந்தமாய், "மந்தரே! இன்றைக்கு என்ன இப்படிப் பேசுகிருய்? எனக்குப் பரதன் எப்படியோ அப்படியே இராமனும் பிரியமுள்ளவனுவான். அவன் மாசற்ற மனமும் நற்குணமும் உடையவன். இராஜ்யம் அவனுக்குக் கிடைப்பதும், பரதனுக்குக் கிடைப்பது மொன்றே'' என்ருள்.

இதைக்கேட்ட மந்தரை முன்னிலும் அதிகம் கோபாவேசங்கொண்டு, "அடி பயித்தியக்காரி! அப்படியானுல் உன் குமாரனுக்கு இராஜ்யத்தில் உரிமை இல்லாமல் போகாதா? உனக்கு இப்

பொழுது என் வார்த்தை கசப்பாயிருக்கும்; அதன் பலனைக் கடைசியில் அறிவாய். இராமன் கையில் இராஜ்யம் சிக்கிக்கொண்டால் அவன் பரதனை நகரை விட்டுத் துரத்திவிடுவது மல்லாமல், தருணம் பார்த்துக் கொலையும் செய்துவிடுவான். இலட்சுமணன் பேரில் இராமனுக்கு அதிக அன்பிருப்பதினால் அவனைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் பரத சத்துருக்கனரைப்பற்றி நிரம்பப் பயமாயிருக்கிறபடியால், இராமனைக் கானகத்திற்குப் போகச் செய்து, பரதனுக்கு இராஜ்யம் கிடைக்கும்படி ஓர் யுக்தி தேடிப் பிடிக்கவேண்டும்'' என்று கூறினாள்.

இதைக் கேட்ட கைகேயியின் மனத்தில் கெட்ட எண்ணம் வேரூன்றலாயிற்று. இதற்கு ஏதாவது உபாயம் தெரிந்து சொல்லும்படி மந்தரையினிடம் சொன்னாள். அதற்கு மந்தரை, "பூர்வ காலத்தில் விருஷபர்வனுடன் யுத்தம் செய்கையில் தசரதர் அடியுண்டு வீழ்ந்தனரல்லவா? அச்சமயத்தில் நீ அவருக்கு உபகாரம் செய்ததற்காக அவர் உனக்கு அளித்த இரண்டு வரங்களை அவசியமானபொழுது வாங்கிக்கொள்வதாகச் சொல்லியிருந்தாயே. அவைகளை நீ இப்பொழுது வாங்கிக்கொள். அவற்றில் ஒன்றினால் இராமனைப் பதினான்கு வருஷகாலம் வனத்தில் வசிக்க அனுப்பிவிடு; மற்றொன்றினால் பரதனுக்கு இராஜ்யத்தை வாங்கிக்கொடு'' என்றாள்.

மந்தரையினுடைய இவ் வாலோசனை கைகேயிக்கு இசைந்ததாயிருந்தது. அவள் தன் ஆபரணங்களை எல்லாம் கழற்றித் திக்கிற்கு ஒன்றாக வீசி எறிந்து, தலையை விரித்துக் கொண்டு கோபாவேசத்துடன் உட்கார்ந்திருந் தாள். தசரத மகாராஜா பட்டாபிஷேக நற் செய்தியைத் தெரிவிக்கும்பொருட்டுக் கைகேயி யினிடம் வந்தவர் அவளுடைய அலங்கோலத் தைக் கண்டு திகைத்து, "கைகேயி! நீ ஏன் இப்படியிருக்கிறாய்? உனக்கு என்ன வேண்டுமோ சொல். உடனே தருகிறேன்" என்றார். அப் பொழுது கைகேயி அரசனிடமிருந்து உறுதி மொழி பெற்றுச் சொல்லலானாள்.

"மகாராஜரே! தாங்கள், சந்திர சூரியர் களையும் மற்றுமுள்ள தேவர்களையும் சாக்ஷியாக வைத்துக்கொண்டு, வேண்டும்போது இரண்டு வரங்களைக் கேட்டு வாங்கிக் கொள்ளும்படி சொன்னீர்களன்றோ? அவ்வரங்களை நானிப் பொழுது கேட்கிறேன். அவற்றைக் கொடுக்க வேண்டும். முதலாவது, பரதன் அரசாட்சியைப் பெறவேண்டும். இரண்டாவது, இராமன் பதினான்கு ஆண்டு வனம் போகவேண்டும்" என்றாள். கைகேயியினுடைய கடினமான இச்சொற்களைக் கேட்க முடியாமல், தசரதர் துக்கத்தினால் மூர்ச்சையடைந்தார். கொஞ்சநேரம் பொறுத்து மூர்ச்சை தெளிந்

தெழுந்து, “இப்படிப்பட்ட பிடிவாதம் செய்யாதே. முதல் வரத்தைப் பெற்றுக்கொள்; இரண்டாவது கேட்டதை மறந்துவிடு. இதைத் தவிர வேறு என்ன வேண்டுமானாலும் கேள்; தருகிறேன்” என்று கூடியவரை முறையிட்டுக் கேட்டுக்கொண்டும், அவள் கேட்காது, “நீங்களாகச் சொன்ன வாக்கை நிறைவேற்றுவதற்கு உங்களுக்கு ஏன் இவ்வளவு வருத்தம்? உண்மைதான் மனிதருக்கு முக்கிய தருமம்; உண்மையினால்தான் கடவுளை மகிழ்விக்க முடியும். பெரியோர்கள் உயிர்போன போதிலும், சொன்ன வாக்குத் தவறுவதில்லை; நீங்கள் சொன்ன வார்த்தை தவறுவீர்களாகில், இப்பொழுது நான் உங்கள் முன்னிலையில் உயிரை விட்டு விடுவேன்” என்றாள்.

கைகேயியினுடைய கொடிய வார்த்தையானது தசரதருடைய மனத்திற்கு நிரம்பவும் வருத்தத்தை உண்டுபண்ணிற்று. அவர் உடனே இராமருக்குச் சொல்லியனுப்பினார். இராமர் வந்து தாய் தந்தையர் இருவரையும் வணங்கிக் கை கட்டி நின்று, தன்னை வரும்படி சொல்லியனுப்பிய காரணத்தை வினவினார். கவலையிலாழ்ந்திருந்த தசரதருக்கு மறுமொழியளிக்க நா வெழவில்லை. தந்தைக்கு இக்கவலை நேரிடுவதற்குக் காரணமென்னவென்று இராமர் கைகேயியைக் கேட்டார். அவள் நடந்த செய்

திகளனைத்தையும் ஆதியோடந்தமாய்த் தெரிவித்தாள். "பெற்றோர்களுடைய கடமை எதுவோ, அதன்படி நடப்பதே எனக்குத் தருமம். ஆனபடியால், நான் இப்பொழுதே



காட்டிற்குப் போகப் புறப்படுகிறேன். விடையும் பெற்றுக்கொள்கிறேன்" என்று சொல்லி வணங்கிக் கௌசல்யையினிடம் உத்தரவு பெறும் பொருட்டு இராமர் சென்றார்.

தன் குமாரனுக்கு முடிசூட்டும் விழா நடக்கப் போவதைப்பற்றிக் கௌசல்யை மகிழ்ச்சியடைந்துகொண்டிருந்தாள். இதற்குள் இராமர் வந்து காட்டிற்குப் போக உத்தரவு கேட்க, அவள் துக்கத்திலாழ்ந்து, மூர்ச்சையடைந்தாள். அப்பொழுது இராமர் அவளை மூர்ச்சை தெளிவித்து, மெல்லிய குரலுடனும், மதுரமான சொற்களாலும் சமாதானப்படுத்தினார்.

அச்சமயத்தில் சமீபத்திலிருந்து கேட்டுக் கொண்டிருந்த இலட்சுமணர், தன் தந்தை ஒன்றும் ஆலோசியாது குற்றமற்ற இராமசந்திரரைக் கானகம் போகக் கட்டளையிட்டதற்காகக் கோபாவேசங்கொண்டு, தன் தந்தையை யமனுலகுக் கனுப்ப வெண்ணினர். அதையறிந்த இராமர், இலட்சுமணருக்கு நல்லறிவு புகட்டித் தடுத்தனர். "பெற்றோர்களுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவது மக்களுடைய கடமை ; அப்படி அவர்கள் செய்யார்களாகில் நன்மையடையார்கள்" என்று சாந்தப்படுத்தினர். இவ்வாறு மொழிந்த இராமசந்திரருடைய அறிவுரைகளுக்கு இலட்சுமணர் இசைந்தார்.

பிறகு இராமர் சீதையினுடைய மாளிகை சென்றார். நடந்த செய்திகளைக் கேட்டுச் சீதை துன்பமடைந்து, "தாங்கள் காட்டிற்குப் போகப் புறப்பட்டீர்களாகில், என்னையும் கூட அழைத்துச் செல்லுங்கள்" என்றாள். "கானகத்தில் புலி, சிங்கம் முதலிய பயங்கரமான விலங்குகள் இருக்கும். அவ்விடத்தில் கந்த மூலங்களைப் புசித்துப் பலவிதமான கஷ்டங்களோடு காலத்தைக் கழிக்கவேண்டும். நீ இதுகாறும் சுகமாய் வளர்ந்திருந்தவள் ; துன்பங்களை உன்னால் எவ்வாறு சகிக்கக்கூடும்?" என்று சொல்லி, அயோத்தியிலேயே இருக்கும்படி அவள் மனத்தைத் திருப்ப முயன்றும் முடியவில்லை. "உடல் போகிறவிடத்தில்

அதன் நிழலும் கூடவே போகும். அதுபோல் தாங்கள் போகுமிடமெங்கும் நானும் வருவேன்" என்று அவள் உருகி உரைத்தாள்.

அதன் பேரில் இராமர் அவளை அழைத்துக்கொண்டு, இலட்சுமணரை நோக்கி, "இலக்ஷ்மணா! நீ இங்கிருந்து எல்லோரையும் பார்த்துக்கொள்; என்னுடைய பிரிவினால் வருந்தும் தாய் தந்தையர்களின் கவலையை யாற்று; நான் தந்தையார் கட்டளைப்படிக் கானகம் சென்று மீள்வேன்" என்றார். இலட்சுமணர் அதை மறுத்துத் தாமும் இராமனுடன் காட்டிற்குப் புறப்படுவதாயும், வனத்தில் இராமருக்குத் துணையாயிருந்து காய் கனி கிழங்கு முதலியன கொணர்ந்து கொடுத்துப் பணிவிடை செய்யத் தமக்கு விருப்பமென்றும் கூறி ஆயுத பாணியாய்ப் புறப்பட்டார்.

## வனம் புகுதல்

இராமர், உத்தரவு பெற்றுக்கொண்டு, சீதையுடனும் இலட்சுமணருடனும் வனம் போகப் புறப்பட்டார். அப்பொழுது அயோத்தி மா நகரில் அனைவரும் ஒருமிக்கக் கூக்குரலிட்டுக் கதறியழலானார்கள். அவர்கள் மூவரும் வனம் போவதற்குச் சுமந்திரன் என்னும் மந்திரி தேர் கொண்டுவர, அவர்கள் அத்தேரிலேறி நகரைக் கடந்தனர். சாரதி அவர்களைத் தமஸா என்னும் ஆற்றங்கரையில்

விட்டு விட்டுத் திரும்பிவந்தான். இராமரைப் பிரிந்த தசரதர் புத்திர சோகத்தில் மூழ்கி இனிமேல் தாம் மறுபடியும் இராமனை என்று காணமுடியுமென்று இராமா ! இராமா ! என்று கூறிக்கொண்டே உயிரைவிட்டார்.

சிராவணவதத்திஞல் கிடைத்த சாபத்தின் பலனைத் தசரதர் அடைந்தார். சிராவணனென்பவன் சரயு ஆற்றங்கரையில் வசித்தவன். ஓர் நாள் தன் பெற்ரேரின் தாகத்திற்குத் தண்ணீர் கொண்டுவரும் பொருட்டு ஆற்றங் கரைக்குப் போய்ப் பாத்திரத்திஞல் நீரை முகக் கையில் புடுபுடுவென்று ஒலியுண்டாயிற்று. அத் தருணத்தில் வேட்டையின் பொருட்டு அங்குச் சென்ற தசரத ராஜா அச்சத்தத்தைக் கேட்டு அது ஒரு விலங்கிஞெலியென்று கருதித் தூர இருந்தே அய்பு எய்தார். அவ்வம்பு சிராவணன்மேல் படவே அவன் உயிர்விட்டான். இச்சங்கதி தசரதரால் அவன் தாய் தந்தையர்களுக்குத் தெரிந்தது. அப்பொழுது அவர்கள், " நீயும் எங்களைப்போல் புத்திர சோகத்திஞல் வருந்தி இறப்பாய்" என்று சாபமிட்டு உயிரை விட்டார்கள். அந்தச் சாபமே இப்போது தசரதருக்குப் பலித்தது.

தசரதர் மரணமடைந்தபொழுது மந்திரிகள் அவசரமாய்த் தூதரை அனுப்பிப் பரதனை வரவழைத்தார்கள். பரதன் அயோத்திக்கு

வந்த பிற்பாடு, இராமர் வனவாசம் போனதற்கும், தசரதருடைய மரணத்திற்கும் தன் தாயின் பிடிவாதமே காரணமென்று அறிந்தான். அப்பொழுது அவன் துயரத்தினால் நிரம்பவும் வருந்தினான். தாயின்மீது கோபங்கொண்டு அவளை நிந்தித்துப் பேசினான். கைகேயியின் மனதில் கெட்ட எண்ணம் உதிப்பதற்குத் தாதி மந்தரை தான் காரணம் என்றறியவே, அவனுடைய கோபம் இன்னும் அதிகமாகப் பொங்கிற்று. அக் கோபாவேசத்தில் மந்தரையைக் கொன்றுவிடவும் உத்தேசித்தான். பிறகு ஒருவாறு சாந்தமாய்த் தன் கோபத்தை தணித்துக் கொண்டான்.

## பரதன்

இராமர், இலட்சுமணர், சீதை இம்மூவரும் கங்கை யாற்றங்கரை வந்து சேர்ந்தார்கள். அவ்விடத்தில் குக னென்றொரு படகோட்டும் வேட அரசன் இருந்தான். அவனுக்கு இராமர் வந்த செய்தி தெரியவே, அவன் அவ்விடம் வந்து, அம் மூவரையும் வெகு மேன்மையாகக் கொண்டாடி, அவர்களைத் தன் படகில் உட்கார வைத்துக்கொண்டு அக்கரைக்குக் கொண்டுபோய் விட்டான். பிறகு அவர்கள் கால்நடையாகச் சென்று, பிரயாகைக் கருகில் உள்ள பரத்வாஜ முனிவரின் ஆசிரமம் போய்ச் சேர்ந்தார்கள். அவ்விடத்தில் அம் முனிவரின்

ஆசீர்வாதம் பெற்றுச் சித்திரகூட பர்வதத் திற்குச் சென்றார்கள்.

அதனருகில் மரக்கிளைகளினாலும், இலைகளி னாலும் இலட்சுமணரால் அமைக்கப்பட்டப் பர்னசாலையில் அம் மூவரும் தங்கி அவ்வனங் களின் காட்சியைக் கண்டும், அங்குத் துள்ளி



யோடும் மான் முதலிய மிருகங்களின் இயல்பு களை யறிந்தும, மரக்கிளைகளில் குதித்துக் குதித் துக் கூவிக் களிக்கும் பலவகைப் பறவைகளின் இனிய கீதங்களைக் கேட்டும் பரவசமுற்றுத் தங் கள் நகர வாழ்க்கையையும் மறந்து இருந்தனர்.

வனத்தில் குளிர்மர நிழலில் உலாவியும், அருவி களில் நீராடியும், மனோகரமாக ஒருவர்க்கொரு வர் பேசிக்கொண்டும் உல்லாசமாய்ப் பொழுது போக்கினர்.

அச்சமயத்தில் பரதன் உற்றாரோடும் பரி சனங்களோடும் வந்து வணங்கினான். பின்பு தகப்பனாருடைய மரணத்தைத் தெரிவித்து, "கைகேயியினுடைய குற்றத்தை மன்னியுங்கள் ; என் வேண்டுகோளுக்கிரங்கி அயோத்திக்குத் திரும்புங்கள் ; வந்து அரசாட்சியை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று இராமருடைய பாதத் தில் விழுந்து மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொண்டான். தந்தையாரின் இறுதியை அறியவே, இராமர், இலட்சுமணர், சீதை மூவரும் மிகவும் வெகுவாகப் புலம்பிக் கண்ணீர் விட் டழுதார்கள். அங்கு வந்திருந்த வசிஷ்டர் தேற்ற ஒருவாறு தேறினர். பரதன் வந்த காரணத்தை யறிந்து இராமர் பின்வருமாறு அவனுக்குப் பதில் கூறத் தொடங்கினர் :

"என தன்புள்ள தம்பீ ! பெற்றோர் கட் டளை யெதுவோ, அதை நிறைவேற்றுவதுவே பிள்ளைகளின் கடமை ; ஆதலால் தந்தையாரின் வாக்கைக் காப்பாற்றுவதற்கு நீயும் எனக்கு உதவி செய். நான் உனது தமையன் ; என் வார்த்தையைக் கேட்பதும் உனக்குக் கடன். பெற்றோர் விருப்பப்படி நீ அரசனாகி உலகைக்

காப்பாற்று. இப் பதினுன்கு வருடமும் வெகு சீக்கிரத்தில் கழிந்துபோகும். உடனே அயோத்திக்குத் திரும்பி வந்துவிடுவேன்.''

தனது முன்னவர் காட்டில் வருந்துவாரென்னும் வருத்தம் ஒருபுறமும், அவர் வார்த்தையை மீற முடியவில்லையே என்னும் வருத்தம் மற்றொரு புறமுமாகப்பரதன் இருதலைக்கொள்ளி



யெறும்பு போலானுன். இராமரின் அழுத்தமான வற்புறுத்தலின் பேரில் கடைசியாக ஒருவாறு உடன்பட்ட பரதன், இராமரது பாதுகையைக் கொடுக்கும்படி கேட்டு வாங்கிக் கொண்டு அயோத்திக்குத் திரும்பினுன்.

இராமரின் பாதுகையைச் சிங்காதனத்தில் வைத்து, சத்துருக்கனனைச் செங்கோல் செலுத்த உத்தரவிட்டுத் தான் முன்னவனைப் போலவே சடையும் மரவுரியும் தரித்து, அவர் வருகையை எதிர் பார்த்துக்கொண்டு, நந்திக் கிராமம் என்னும் ஊரில் பரதன் வசிக்கலானுன்.

# 3. ஆரண்ய காண்டம்

[இராமர், ஆரண்யத்தில் வசித்துவந்தபோழுது நடந்த வரலாற்றைச் சொல்வதால் இதற்கு ஆரண்ய காண்டமென்று பெயர்.]

பரதாழ்வான் பாதுகை பெற்றுக்கொண்டு திரும்பிய பிறகு இராமர், இலட்சுமணர், சீதை இம்மூவரும் அத்திரி முனிவருடைய ஆச்சிரமத்திற்குச் சென்றார்கள். அத்திரி முனிவரின் பத்தினி அவர்களை வரவேற்றுச் சீதைக்குச் சில ஆடை ஆபரணங்களைக் கொடுத்து உபசரித்தாள். அம்முனிவரின் ஆசீர்வாதம்பெற்று அம்மூவரும் தண்டகாரண்யம் சென்று கோதாவரிக் கரையில் பஞ்சவடி என்னும் இடத்தில் பர்னசாலை அமைத்து அதில் வசித்துக் கொண்டு, இலட்சுமணர் கொணர்ந்த கந்த மூலாதிகளைப் புசித்தும், அக்கோதாவரி தீரத்தில் உலாவியும், தங்களைக் காணவந்த முனி புங்கவர்களுடன் வார்த்தையாடியும் அங்குக காலம் கழித்து வந்தனர்.

ஒருநாள் சூர்ப்பநகை என்னுமோர் அரக்கி அவர்களுக் கருகில் வந்து, இராம பிரான்மீது ஆசை கொண்டு தகாத செயல் செய்ததினால், இலட்சுமணர் சூர்ப்பநகையினுடைய மூக்கையும், காதையும் அறுத்துவிட்டார். அவ்வரக்கி கதறிக்கொண்டு தன்னுடைய இனத்தவர்களாகிய கர தூஷணர்க

ளிடத்தில் சென்று தன்னைப் பங்கப்படுத்தியது, செய்திகளை யெல்லாம் சொன்னாள். அவர்கள் பதினாலாயிரம் சேனைகளுடன் இராமர்மீது படையெடுத்துப் போருக்கு வரவே, ஸ்ரீராமர் அவர்களை யெல்லாம் மூன்று நாழிகை நேரத்துக்குள் கொன்றுவிட்டார்.

“திரிசிரன், கரன், தூஷணன் இவர்கள் மிக்க பராக்கிரமசாலிகள். இவர்கள் அனைவரையும் கேவலம் சிறு வாலிபனாகிய இராமன் ஒருவனே போரில் கொன்றான. இவனை என் சகோதரனாகிய இராவணனைக் கொண்டாவது என்னை அவமானப்படுத்தின பழிக்குப் பழி வாங்குவேன்” என்று கருதி, சூர்ப்பநகை இலங்கைக்குச் சென்றாள்.

இராவணன் தன் கொலுமண்டபத்தில் வீற்றிருக்கையில், சூர்ப்பநகை கண்ணுங் கண்ணீருமாய்த் தன்னுடைய குரூரமான முகத்துடன் சென்று, “நீங்கள் என்ன கவலையின்றி உட்கார்ந்திருக்கிறீர்கள்? அவ்விடத்தில் இராமனென்னுமோர் மானிடன் எவ்வளவு தீமை செய்துவருகிறான். முதலில் அவனை அடக்குங்கள். இல்லாவிட்டால் அவன் உங்களை யெல்லாம் கொன்றழிப்பான். அவன் என் நாசியையும், செவியையும் அறுத்து என்னைப் பங்கம் செய்தபடியைப் பாருங்கள். அது மட்டுமா? எனக்காகப் பரிந்து போருக்குச் சென்ற கர

தூஷணர்களையும், பலசாலிகளான பல அரக்கர்களையும் கொன்றுவிட்டான். உங்களுக்கு ரோஷமில்லையா ? இனிப் பகைவர்களாகிய தேவர்களும், முனிவர்களும் உங்களை மதிப்பார்களா? அவனிடத்தில் சீதையென்னும் கட்டழகி ஒருத்தி யிருக்கின்றாள். மூவுலகிலும் அவளையொத்த வடிவழகுடையவர்கள் கிடையாது. எவ்வுலகையும் ஆளப்பட்ட உனக்குத்தான் அத்தகைய பெண்மணி ஏற்றவளென்று அவளை யுன்னிடம் சேர்ப்பிக்க முயன்ற எனக்கு இந்தக் கதி வாய்த்ததே'' என்று சொல்லிப் புலம்பினாள்.

## சீதையைப் பறிகொடுத்தல்

சூர்ப்பநகையின் அலங்கோலத்தைக் கண்டும், அவளுடைய சொற்களைக் கேட்டும் இராவணனுக்குக் கோபம் பொங்கிற்று. உடனே இராமரைக் கொல்லவும், அவரிடத்திலுள்ள சீதையைக் கவரவும் அவன் எண்ணினான். அவன் மாரீச னென்கிற தன் மாதுலனிடம் சென்று, தந்திரமாய்ச் சீதையை வஞ்சித்துக் கவர்ந்துவர ஆலோசனை கேட்டான். அதற்கு மாரீசன், “இப்படிச் செய்ய நினைப்பது தவறு. உனக்கு இந்தத் துஷ்டபுத்தி யார் சொல்லித் தந்தனர்? இவ்வாறு செய்வதினால் கும்பகர்ணன், விபீஷணன் முதலிய கொத்தோடு நீங்கள் நாசமடைவது திண்ணம்'' என்று சொன்

ளுன். மரணம் சமீபித்திருக்கிற வியாதியாள னுக்கு மருந்தை யருந்த எவ்வாறு மனம் வராதோ, அவ்வாறே மாரீசனுடைய இவ்வுப தேசம் இராவணனுக்குப் பிடிக்கவில்லை. என் செய்வான்! இராவணன் தன் பிடிவாதத்தைக் கைசோரவிடாமல், "என் கட்டளையை மறுப்பா யாகில் இப்பொழுதே உன் சிரத்தை வெட்டு வேன்" என்று சொல்லவே மாரீசன் விதி யின்றி உடன்படலானுன். அவ்விருவரும் தேரி லேறித் தண்டகாரண்யம் நோக்கிச் சென் ருர்கள்.

அவ்விடத்தில், மாரீசன் கபடமாய் மான் வேடந் தரித்துச் சீதை வசிக்கு மிடத்திற்கு அருகில் மேய வந்தான். அம் மானின் நிறம் பொன்னைப்போலவும், கொம்பு பவளத்தைப் போலவும், தேகத்தின்மீதுள்ள புள்ளிகள் முத்தைப்போலவும், கண்கள் இரத்தினத் தைப்போலவு மிருப்பதைக் கண்டதும் அதைப் பிடித்து வளர்க்கவேண்டுமென்கிற எண்ணம் சீதைக்கு உண்டாயிற்று. அவள் தன் எண் ணத்தைத் தன் கணவருக்குத் தெரிவித்து, அம் மானைப் பிடித்துத் தரும்படி மிகவும் விருப் பத்துடன் வேண்டினுள்.

சீதையைப் பாதுகாக்கும் பொருட்டு இலட்சுமணரைக் காவலாக வைத்துவிட்டு, இராமபிரான் மானைத் தொடர்ந்து சென்ருர்.

அம்மானுனது இராமரை ஏமாற்றிக் கொண்டே வெகுதூரம் ஓடிற்று. கடைசியாய் இராமர் மாரீசனுடைய வஞ்சனையை அறிந்து, அவனை ஓர் அம்பினுல் கொன்ருர். சாகும்பொழுது மாரீசன் தான் முன்பே யோசித்து நிச்சயித்த படி இராமருடைய குரலைப் போல, "சீதையே! இலட்சுமணனே! ஓடிவந்து என் பிராணனைக் காப்பாற்றுங்கள்" என்று கூக்குரலிட்டுக் கதறி விழுந்தான். அதைக் கேட்டதும் இராமர் தமக்குப் பெரும் விபத்துச் சம்பவித் திருப்பதாக எண்ணினுர். அக் குரல் பர்ன சாலையிலிருந்த சீதையின் காதிலும் விழவே, அவள் தன் கணவருக்கு உதவி செய்யும் பொருட்டு இலட்சுமணரைப் போகும்படிவேண் டினுள். "இது இராமருடைய குரலன்று; அவ ருக்கு யாராலும் பயமில்லை, அது ஒரு மாய மான்; நமக்குத் தீமை விளைவிக்கும் பொருட்டு இவ்வாறு பெருங் குரலிட்டது" என்று இலட்சு மணர் அவளுக்கு எவ்வளவு எடுத்துச் சொல்லி யும், சீதை கேட்காமல் அவரைத் தூஷித்துப் புலம்பினுள். உடனே அவர் அவ்விடமிருந்து புறப்பட்டுப் போனுர். அத்தருணத்தில் இரா வணன் பஞ்சவடியண்டை வந்து சீதையைப் பர்னசாலையோடு எடுத்துத் தன் தேரிலேற்றிக் கொண்டு இலங்கையை நோக்கிச் செல்லத் தொடங்கினுன். அப்பொழுது சீதை கதறி யழுது இலட்சுமணரைக் கூப்பிடலானுள்.

## ஜடாயு

பஞ்சவடியில் இராம லட்சுமணருக்குக் காவல்பூண்டிருந்த கழுகு அரசனாகிய ஜடாயு வென்பவர் சீதையினுடைய கூக்குரலைக் கேட்டு, அங்கு வந்து அவளை விட்டுவிடும்படி இராவணனுக்குக் கூறினார். அவன் கேட்கவில்லை. அப்பொழுது கோபாவேசங் கொண்டு அவர் இராவணனுடைய தேரில் பாய்ந்து தேரின் கொடியை யறுத்துப் பாகனைக் கொன்று, அவனுடைய முதுகின் சதையையும் கொத்தி எடுத்து இவ்வாறு அவனோடு போர்புரிந்தார். இராவணன் அவ் வெளிய ஜடாயுவைத் தன் வாளாயுதத்தினால் ஒரே வீச்சாக வீசி, இரண்டு சிறகுகளையும் அறுத்துவிட்டான். சிறகுகளை யிழந்தமையால் ஜடாயு மிக மெலி வடைந்து கீழே விழுந்து மூர்ச்சித்தார். இராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு இலங்கைக்குச் சென்றான்.

இராமர், மாரீசனைக் கொன்று திரும்புகையில் வழியில் இலட்சுமணரைச் சந்தித்தார். "சீதையைத் தனிமையில் நீயேன் விட்டு வந்தாய்?" என்று கேட்க, அவர் நடந்த விபரீதத்தை யெடுத்துக் கூறினார். இருவரும் கவலைப்பட்டுக் கொண்டே பர்னசாலைக்கு வந்து பார்க்க, அங்குச் சீதை காணப்படவில்லை. அப்பொழுது இராமர் துயர்க் கடலி லாழ்ந்து

சீதையை நினைந்து நினைந்து கவலைப்படலானார். சீதையினுடைய பிரிவினால் மனங் கலங்கி அவர்கள் மரங்களின் அடியிலும், குகைகளிலும், மலைகளிலும், ஆற்றங்கரையிலுமாக ஒவ்வோரிடத்திலும் அவளைத் தேடினர். சீதையைக் காணாமையினால் மிகவும் வருந்தி வனமெங்கும் தேடிக்கொண்டே நடந்து, கடைசியில் சிறகிழந்து இரத்த வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த ஜடாயுவிருக்குமிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

சீதையைப் பலவந்தமாய் இராவணன் தேரிலேற்றிக் கொண்டுபோவதைக் கண்டு, அவளை விடுவிக்கத் தாம் முயன்றதையும், தமக்கு நேர்ந்த கதியையும் சொல்லி இராமருடைய பாதாரவிந்தத்தில் ஜடாயு உயிர்விட்டார். சீதையின் நிமித்தம் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் போர்புரிந்த கழுகரசனிடம் இராமர் மிகுந்த கனிவுகொண்டார்.

பிறகு ஜடாயுவுக்கு ஈமக்கடன், நீர்க்கடன் முதலியவற்றைச் செய்துவிட்டு, சீதையைத் தேடும் பொருட்டு அவ்விடமிருந்தும் அவர்கள் புறப்பட்டார்கள்.

# 4. கிஷ்கிந்தா காண்டம்

[கிஷ்கிந்தை யென்னுமிடத்தில் நடந்த வரலாறுகளைக் கூறி யிருப்பதனால் இதற்குக் கிஷ்கிந்தா காண்டமென்று பெயர்.]

## சுக்கிரீவன்

சீதையைக் கவர்ந்து கொண்டு இராவணன் தெற்கே இலங்கையை நோக்கிச் சென்றானென் கிற செய்தியை ஜடாயுவினால் அறிந்தது முதல், எவ்வாறு அவளை அடைவதென்கிற விசாரம் இராம லட்சுமணர்களை வருத்தலாயிற்று. சீதை தான் கவரப்பட்டுப் போகும்பொழுது, இராம லட்சுமணர் அடையாளம் கண்டு வழி தெரிந்து கொள்ளும் பொருட்டு, வழியினிடையில் தன் ஆபரணங்களைக் கழற்றி யெறிந்து கொண்டே போயிருந்தாள். அவ்வடையாளங்களைப் பற்றிக்கொண்டு இராம லட்சுமணர் இருவரும் அவளை நாடிச் சென்றார்கள்.

அவ்வாறு நெடுந்தூரம் சென்று, கடைசியில் அவர்கள் ருசியமூக பர்வதத்தி னருகில் பம்பா நதிக்கரையி லுள்ள கிஷ்கிந்தா பட்டணம் வந்து சேர்ந்தார்கள். இவ்விடத்தில் வாலி என்னுமோர் வானர அரசன் அரசாண்டு கொண்டிருந்தான். அவனுக்குச் சுக்கிரீவனென்றொரு தம்பி யிருந்தான். அவர்களிருவரும் ஒருவரோடொருவர் பகைமை பாராட்டி யிருந்

தனர். சுக்கிரீவனுக்கு அநுமான் என்ருெரு வீரன் துணைவனாக இருந்தான். அவன் மூல மாய்ச் சுக்கிரீவனுக்கும் இராம லட்சுமணர்களுக் கும் நட்புண்டாயிற்று. இராமர் சுக்கிரீவனை அன்போடு நேசித்தார். பின் இராமர் வாலி யைக் கொன்று இராஜ்யத்தை அவனுக்குக் கொடுப்பதாக வாக்களித்தார். அதற்குக் கைம் மாருகச் சீதையைத் தேடும் முயற்சியில் தன்னு லான உதவியைச் செய்வதாகச் சுக்கிரீவன் வாக் களித்தான்.

சகோதரர்களாகிய சுக்கிரீவனுக்கும் வாலிக் கும் எவ்வாறு பகைமை யுண்டாயிற்றென்ருல், தந்தையின் மரணத்தின் பின்பு மூத்த குமார னை வாலி பட்டத்திற்கு வந்தான். வாலியும், சுக்கிரீவனும் ஒருவர்க்கொருவர் சகோதர வாஞ்சை கொண்டிருந்தனர். வெகு நாளைக்குப் பின் மாயாவி என்னும் அசுரனுக்கும் வாலிக் கும் சண்டை நடந்தது. வாலி சுக்கிரீவ ரிருவரு மாக அவ்வசுரனை யெதிர்த்துப் போர்புரிந்து கொண்டிருக்கையில் மாயாவி ஓடி ஓர் குகையில் போய் நுழைந்து மறைந்தான். வாலி, சுக்கிரீ வனை அக் குகையின் வாயிலண்டை நிற்கச் சொல்லித் தான் அவ்வசுரனைப் பின் தொடர்ந்து குகையினுட் சென்ருன். எதிரியைத் துரத்திக் கொண்டு சென்ற வாலி நெடுநாள்வரை திரும்பி வரவில்லை.

சுக்கிரீவன் ஓர் வருஷகாலம் வரையில் தன் சகோதரன் வருவானென்று எதிர் பார்த்தும் வரக் காணுமையால் வருந்தினுன். பின் அக்குகையினுள்ளிருந்து இரத்தம் பெருகி வருவதைக் கண்டான். தன் தமையன் இறந்திருப்பானென்று கருதி, தன்னிலும் வலியவனை தன் முன்னவனைக் கொன்ற பகைவன் திரும்பி வந்து எங்கே தன்னையும் கொன்று விடுவானே என்று பயந்து, அக்குகையின் வாயிலைக் கனத்த பாராங்கல் ஒன்றைக் கொண்டு அடைத்து விட்டு, கிஷ்கிந்தைக்கு வந்தான். அங்குமந்திரிகளின்சம்மதத்தைப்பெற்றுத் தான் மகுடஞ் சூடிக் கிஷ்கிந்தையை அரசுபுரிந்து வருவாஞனுன். உண்மையில் வாலி சாகவில்லை; பகைவனே இறந்து ஒழிந்தான். குகையின் வெளியில் வந்த இரத்த வெள்ளம் அப்பகைவனுடையதே. வாலி அவ்வசுரனைக கொன்றுன்.

வாலி திரும்பி வருகையில் குகையின் வாயில் மூடியிருக்கக் கண்டான். அரசனுக வேண்டுமென்னும் கெட்ட எண்ணத்தோடு சுக்கிரீவன் குகையின் வாயிலை மூடித் தன்னை வஞ்சித்துக் கொல்ல நினைத்தான் என்று வாலி தப்பு எண்ணம் கொண்டான். சுக்கிரீவன்மீது வாலிக்கு அடங்காக் கோபம் மூண்டது. தன் வலிமையினுல் குகையை மூடியிருந்த பாராங் கல்லைத் தள்ளி யெறிந்து வெளியில் வந்தான்.

முன்னவன் வருகைக்கு மகிழ்ந்த சுக்கிரீவன் நடந்த செய்தியைக் கூறினன். வாலி அதைச் சற்றும் மனங்கொள்ளவில்லை. சுக்கிரீவனை இராஜ்யத்திலிருந்து வெளிப்படுத்திக் காட்டிற்குத் துரத்திவிட்டான். அதுமுதல் சுக்கிரீவனுக்கும் வாலிக்கும் பகைமை மூண்டிருந்தது. இதுசமயம் இராம லட்சுமணரது நட்புக் கிடைக்கப்பெற்ற சுக்கிரீவன் இவர்களது உதவியினல் நன்மை யடையக் கருதினன்.

## வாலி வதம்

பல முறை வாலியோடு போர்புரிந்து தோற்றுப்போன சுக்கிரீவன், இந்த முறை இராமபிரானது உறுதியினல் சென்று வாலியைப் போர்க்கழைத்து அவனேடு போர் தொடங்கலானன். சுக்கிரீவனுக்கும் வாலிக்கும் போர் நடந்துகொண்டிருக்கும்போது இராமர் மரத்தின் மறைவில் நின்று, வாலியின்மீது பாணம் தொடுத்தார். அது அவன் மார்பில் படவே வாலி விழுந்தான். மரணத் தறுவாயிலிருந்த வாலி, தான் இராமபிரானல் கொல்லப்பட்டதை யறிந்தான். இராமரும் அவன் முன் நின்றார். வாலி அவரைப் பார்த்து, “இராமா! என்னை நீ ஒளிந்து நின்று கொன்றாய். இது உன்னையொத்த வீரனுக்கு அழகா? நான் உனக்கு ஒரு தீங்கும் நினைத்ததில்லை; அப்படியிருந்தும் நீ இதைச் செய்தது எக்காரணம்

பற்றி? சகோதர ராகிய எங்கள் இருவரில் ஒருவன் மீது அன்பும், ஒருவன் மீது பகைமையும் பாராட்டுவது நடுநிலைமைக் கேற்றதாகுமோ ?" என்று பல கேள்விகள் கேட்டான்.

அதற்கு ஸ்ரீராமர், "வாலி! குற்றமற்ற உன் தம்பி, தன்னை மன்னிக்கும்படி பலவாறு கெஞ்சி வேண்டிக்கொண்டும், சற்றும் இரங்காமல் நீ அவன்மீது பகைமை கொண்டாய். இராஜ்யத்தினின்றும் அவனைத் துரத்தினாய். இன்னும் பல இன்னல்களையும் அவனுக்குப் புரிந்து வருகிறாய். அதனால் உன்னைக் கொன்று அவனைக் காப்பது என் கடமையாயிற்று. மேலும், தீயோரைத் தண்டிப்பதும், நல்லோரைக் காப்பதும் அரச தருமமேயாகும். இதில் நான் செய்த தவறு ஒன்றுமில்லை" என்று அவன் செய்த குற்றத்தை எடுத்து மொழிந்தார்.

தன் குற்றத்தை உணர்ந்த வாலி, இராமரை வணங்கி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு உயிர் துறந்தான்.

## சீதையைத் தேடல்

இராமர் சுக்கிரீவனுக்கு இராஜ்யத்தைக் கொடுத்து, அங்கதனுக்கு இளவரசுப் பட்டம் கட்டி வைத்தார். சுக்கிரீவனும் சீதையைத் தேடும்பொருட்டு நான்கு திசைகளிலும் அநுமான், நளன், நீலன், குமுதன் முதலிய வானர வீரர்களை அனுப்பினான். அவர்கள் பல விடங்

களிலும் தேடி ஒரு மாதத்திற்குள் திரும்பி வர வேண்டு மென்றும் கட்டளை யிட்டான். இவ் வானர வீரர்களுக்கெல்லாம் தலைவனாகிய அநு மானை இராமர் கூப்பிட்டுத் தம் கையிலிருந்த கணையாழியைக் காட்டி, "சீதையைக் காண நேர்ந்தால் அவளுக்கு நம்பிக்கை யுண்டாகும் பொருட்டு இதைக் கொடு" என்று சொல்லி அதனை அநுமான் கையில் அளித்தார். அந்தக் கணையாழியைப் பெற்றுக்கொண்டு அநுமான் தெற்குத்திசையை நோக்கிச் செல்ல லானான். இதர திசைகளில் சென்ற வானரர்க ளெல்லோரும் ஒரு திங்களுக்குள் திரும்பி வந் தார்கள். தெற்கே சென்ற அநுமான் வரவில்லை.

"சீதையின் இருப்பிடம் தெரிந்தாலன்றி மீள்வதில்லை" என்று அநுமான் தனக்குள் நிச்சயித்துக் கொண்டான். தற்செயலாய் ஜடாயுவின் சகோதரனாகிய சம்பாதி என்ப வனைத் தெற்குக் கடலண்டை அநுமான் சந்தித்தான். சீதையை இராவணன் கடலுக் கப்பால் இலங்கையில் கொண்டுபோய் வைத் திருப்பதாக அவனால் அறிந்தான். பின், தன்னு டன் வந்த வானரவீரர்களைக் கடற்கரையில் நிறுத்திவிட்டுத் தான் விசுவரூபங்கொண்டு கட லைத்தாண்டி அநுமான் இலங்கைக்குச் சென் றான். அவ்விடத்தில் பல விடங்களிலும் தேடித் தேடிக் கடைசியாய் அசோகவனத்தில் ஓர் மரத் தடியில் சீதை யுட்கார்ந்திருப்பதைக் கண்டான்.

# 5. சுந்தர காண்டம்

[அநுமான் சீதாபிராட்டியாருக்கு இராமபிரானின் அழகை எடுத்துக் கூறுவதால் இதற்கு சுந்தர காண்டமென்று பெயர்.]

## லங்கா தஹனம்

சீதை தனக்கு மணைவாட்டியாகவேண்டுமென்று இராவணன் அவளைப் பலமுறை வற்புறுத்தினான். அவளை அரக்கியரின் பாதுகாவலில் வைத்துப் பல விதத்திலும் துன்புறுத்தினான். பிறகு ஒரு வருஷத்துக்குள் உடன் படாவிடில் தான் கொன்று விடுவதாகவும் பயமுறுத்தினான். சீதை தன் ஆருயிர் நாயகனாகிய இராமனையே நினைத்து நினைத்துத் துக்கித்துக் கொண்டிருந்தாள்.



அவளுக்கு ஊணுறக்கம் ஒன்றும் வேண்டியிருக்கவில்லை. இந்நிலைமையிலிருக்கையில், அநுமார் அங்கு வந்து பிராட்டியைக் கண்டு

வணங்கி இராமர் கொடுத்த கணையாழியைக் கொடுத்து, "இராமரும் லட்சுமணரும் க்ஷேமமாயிருக்கிருர்கள். அவர்கள் சீக்கிரத்தில் வந்து தங்களை விடுதலை செய்து அழைத்துச் செல்வார்கள்" என்று சொல்லித் தேற்றினன். அப்பொழுது அவளுக்குண்டான ஆனந்தத் துக்கு ஓர் எல்லையில்லை. "திரும்பிச்சென்று இராம லட்சுமணர்களை விரைவில் இங்கு அனுப்புக" என்று அநுமானைச் சீதை வேண் டிக்கொண்டாள். அநுமான் திரும்பும்போது அசோகவனத்திலுள்ள மரங்களையெல்லாம் பெயர்த்தெறிந்து மிக அழகுவாய்ந்த பல இடங் களையும் அழிக்கத் தொடங்கினன்.

இச்செய்தி அரக்கர்களுக்குத் தெரியவே, அவர்கள் ஓடிவந்து அநுமானை எதிர்த்தார்கள். அநுமான் அவ் வனைவரையும் அடித்துத் துரத்திவிட்டான். இதனை அறிந்த இராவணன் தன் குமாரர்களாகிய அக்ஷகுமாரனையும், இந்திர ஜித்தையும் அனுப்பினன். அவர்களில் அக்ஷ குமாரனை அநுமான் கொன்று தள்ளிவிட்டான். இந்திரஜித்தினுடைய கையில் அநுமான் தானு கவே அகப்பட்டுக்கொண்டான். அப்பொழுது அநுமானுடைய கை கால்களைக் கட்டி இரா வணனண்டை அழைத்துச்சென்ருர்கள். இரா வணன் அநுமானை நோக்கி, "நீ யார்? இங்கு வந்த காரணம் யாது? அசோக வனத்தையும்

பல இடங்களையும் நாசம் செய்து அரக்கர்களைக் கொல்லக் காரணம் என்ன ?" என்று வினவ, அதற்கு அநுமான், "நான் இராமருடைய தூதன். நீ சீதையை இவ்விடம் கொணர்ந்து வைத்திருக்கிறாய். அவளை நீ விட்டுவிடுவது நலம். நான் வந்திருக்கிற செய்தியை உணர்த்தும் பொருட்டுத்தான் அசோக வனத்தையும் அழித்து, என்னை எதிர்த்த அரக்கரையும் மடித்தேன்" என்று சொன்னான். இவைகளை எல்லாம் செவியுற்ற இராவணன் அநுமானைக் கொன்றுவிடும்படி தன் ஏவலாளருக்குக் கட்டளை யிட்டான்.

இதையறிந்த இராவணனுடைய சகோதரனாகிய விபீஷணன் முன்வந்து, "அநுமான் இராமரிடத்திலிருந்து தூதனாகவந்திருக்கிறான். தூது வந்தவர்களைக் கொல்வதுதர்மவிரோதம்" என்று கூறினான். இவ்வார்த்தைகளை இராவணன் கேட்டு, "இலங்கையில் அநேக தீமைகளை விளைத்த இந்தக் குரங்கின் உயிருக்கு அபாயமில்லாவண்ணம் அதன் வாலில் மட்டும் துணியைச்சுற்றி எண்ணெயில் நனைத்து நெருப்பைக் கொளுத்திவிடுக" என்று உத்தரவளித்தான். அவர்கள் அவ்வாறே செய்தனர். அப்பொழுது அநுமான் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து, இலங்கையிலுள்ள வீடுகள் தோறும் உட்கார்ந்துகொண்டேபோய் இலங்கைமுழுமை

யும் கொளுத்தி விட்டான். அநுமான் வாலில் வைத்த தீ இலங்கை நகரத்தை எரித்தொழித்தது. பின்பு அநுமான் சமுத்திரத்தைத் தாண்டி வானரர்கள் இருந்தவிடம் வந்து சேர்ந்தான். அவ்விடமிருந்து எல்லோருமாக இராமசந்திரரிடம் வந்து சேர்ந்தார்கள். அநுமான் சீதையினிடமிருந்து திரும்பும்பொழுது அடையாளமாகச் சூடாமணியென்னும் இரத்தினத்தை வாங்கிவந்தான். அந்தத் திவ்விய மணியை இராமசந்திரரிடம் கொடுத்து நடந்த செய்திகளனைத்தையும் சாங்கோபாங்கமாய்ச் சொல்லவே, இராமசந்திரருக்கு அளவற்ற ஆனந்தமுண்டாகி அநுமானை ஆசீர்வதித்தார்.



# 6. யுத்த காண்டம்

[இராவணனோடு செய்த யுத்தத்தைப்பற்றிச் சொல்லியிருப்பதினால் இதற்கு யுத்த காண்டமென்று பெயர்.]

அநுமான் சொல்லிய செய்திகளைக் கேட்டுச் சீதையை விடுவிக்கும் பொருட்டு இராமர், இலட்சுமணர், சுக்கிரீவன் இம்மூவரும் வானர சேனைகளுடன் சமுத்திரக் கரையை யடைந்தார்கள். சமுத்திரத்தை யெளிதில் கடந்து செல்லும் பொருட்டு வானர வீரர் வாராவதி கட்டத் தொடங்கினர்.

## விபீஷணன் அடைக்கலம்

இலங்கையில், தன் படைகளை யெல்லாம் இராவணன் போருக்குச் சித்தப்படுத்தினான். "இராமனென்பவன் கேவலம் மனிதன். அதிலும் சிறு வாலிபன். அவனை வெல்வது எனக்கு ஒரு பெரிய காரியமன்று" என்கிற எண்ணமுடையவனாய் இருந்தான். விபீஷணனுக்கு மட்டும் அது சரியெனத் தோன்றவில்லை. விபீஷணன் மிகத் தூய்மைவாய்ந்த மனமுடையவன்; நேர்மையான நடக்கையும் நல்ல சுபாவமும் உடையவன். சீதையை இராமசந்திரரிடம் அனுப்பிவிடுவதே மேலென்று அவன் பலதடவைகளிலும் இராவணனிடம் சொல்லி மன்றாடிக் கேட்டுக்கொண்டான். அவன் சொல்லை இராவணன் சிறிதும் பொருட்படுத்தினானில்லை.

கடைசியில் அவன் இராவணனை வெறுத்து இலங்கையினின்றும் நீங்கி இராமசந்திரரிடம் சரணமடைய வந்தான். வானர வீரர்கள், விபீஷணனைச் சேர்த்துக்கொள்ள இசையவில்லை. இதனையறிந்த இராமர், "பகைவராயிருந்தாலும் சரணம் என்றவரைக் காப்பதே மேன்மக்கள் கடமை" என்று அவர்களுக்குத் தெரிவித்



தார். அவர் விபீஷணனை அன்போடு ஏற்று அவனுக்கு அபயமளித்தார். இலங்கை இராஜ்யத்தை அவனுக்குக் கொடுப்பதாக வாக்களித்தார்.

பிறகு சமுத்திரத்தை எளிதில் கடந்து போக வானரர் வாராவதி கட்டி முடித்தனர்.

சேனைகளுடன் இராமசந்திரர் சமுத்திரத்தைத் தாண்டி அக்கரையிலிருக்கும் சுவேதாசலம் என்னும் மலையின்மேல் வந்து தங்கினார்.

## போருக்கு ஆயத்தம்

வானர சேனைகள் வந்திறங்கிய செய்தி இராவணனது செவிக்கு எட்டவே, அவன் சுகன், சாரணன் என்னும் இரு தூதர்களைச் சத்துருக்களின் நிலைமை எவ்வாறிருக்கிறதென்று கண்டறிந்து வரும்பொருட்டு அனுப்பினான். அவர்கள் திரும்பிப்போய், "வானர சேனை மிகப் பெரியதாயிருக்கிறது. அவர்களை எதிர்த்து வெல்வோமென்பது எளிய காரியமன்று. ஆகையால் சீதையை விட்டுவிட்டு, இராமனோடு நட்புக்கொள்வதே மேல்" என்றார்கள். இராவணனுடைய மனைவியாகிய மண்டோதரியும் இவ்வாறே கூறினாள். இராவணன் யாருடைய போதனைக்கும் இசைய வில்லை.

பிறகு இராவணன் சீதையைத் துன்புறுத்தும் பொருட்டு இராமருடைய தலையைப் போலவே ஓர் தலையையும், அவருடைய வில்லைப் போலவே ஓர் வில்லையும் செய்வித்து, அவற்றைச் சீதையினிடம் அனுப்பி, "நாங்கள் இராமனைப் போரில் கொன்றோம். இப்பொழுதாவது என் சொல்லிற் கிசைந்து நடந்து கொள்" என்று சொல்லியனுப்பினான். அவள் இந்தத் தந்திரமெல்லாம் உண்மை

யென்று நம்பவில்லை. தன் மனவுறுதியைச் சோரவிடாது இருந்தாள். அப்பொழுது விபீஷணனுடைய புதல்வியாகிய திரிசடை என்பவள் வந்து, "இவையெல்லாம் வெறும் சூது; இராம லட்சுமணர் சுகமாயிருக்கிறார்கள்" என்று சொல்லிச் சீதையைத் தேற்றினாள். இராவணனுடைய முயற்சி எல்லாம் பயனற்றுப் போனபடியினால், அவன் சேனைகளை ஆயத்தப்படுத்திக்கொண்டு சத்துருக்களை எதிர்க்கப் பாசறையை நாடிச் சென்றான்.

## போர் தொடங்கல்

முதலில் இராமசந்திரர் யுத்தம் செய்யாமல், சமாதானத்திலேயே காரியம் முடியுமானால் பார்க்கலாமென்று, அங்கதனை இராவணனிடம் தூது அனுப்பினார். அஃதொன்றும் பயன்படாமையால் அங்கதன் திரும்பி வந்தான். யுத்தம் தொடங்கலாயிற்று. இராவணனுடைய மகனாகிய இந்திரஜித்து வந்து தனது வலிமையைக் காட்டி, இராம லட்சுமணர் இருவரையும் மூர்ச்சை யடைந்து விழுமாறு செய்து ஜாம்பவான், அநுமான், அங்கதன் முதலிய வானர வீரர்களையும் காயப்படுத்தினான். இராம லட்சுமணர் கீழே விழுந்திருப்பதைக் கண்டு அவர்கள் இறந்து போயிருப்பார்களென்கிற எண்ணத்துடன் யுத்தத்தை நிறுத்தி வெகு ஆனந்தத்துடன் இந்திரஜித்துத் தன் இராஜதானிக்குச் சென்றான்.

சத்துருக்களை வென்ற செய்தி அறியவே, இராவணன் மிக ஆனந்தமடைந்து, சீதையைப் புஷ்பக விமானத்தில் ஏற்றி, இராம லட்சுமணர் இறந்து கிடப்பதை அவளுக்குக் காண்பிக்கும்படி கட்டளையிட்டான். சீதை அவர்களுடைய நிலைமையைக் கண்டு கதறியழலானாள். அப்பொழுது "இராம லட்சுமணர் ஜீவித்திருக்கிறார்கள்; சாகவில்லை. மூர்ச்சையேயன்றி மரணமன்று" என்று திரிசடை சொல்ல அவள் சோகத்தை மாற்றினாள்.

போர்க்களத்தில் இராம லட்சுமணர் மெல்ல மெல்ல மூர்ச்சை தெளிந்து மறுபடியும் யுத்தத்திற்கு எழுந்து நின்றார்களென்று தெரியவே, இராவணன் கவலையிலாழ்ந்தான்.

அவன் புகைக் கண்ணன், வஜ்ரதந்தன், அகம்பன் முதலிய போர்வீரர்களை அனுப்பினான். வானரர்கள் அவர்கள் எல்லாரையும் கொன்றுவிட்டார்கள். அப்பொழுது இராவணன், இந்திரஜித்து, நிகும்பன் இவர்களையும், மற்றும் சில வீரர்களையும் அழைத்துக்கொண்டு யுத்தத்திற்கு வந்து வெகு ஆவேசத்துடன் போர்புரிந்து சுக்கிரீவனை வீழ்த்தினான். அநுமானை மூர்ச்சிக்க அடித்தான். நளனைப் பாதி உயிராக்கிக் கீழே வீழ்த்தினான். கொடூரமான இச் செய்கையைக் கண்டு இலட்சுமணர் இராவணனை எதிர்த்தார். இவரையும் இராவணன்

ஓர் வேலாயுதத்தினுல் காயப்படுத்திப் பின் கட்டாகக் கட்டித் தன்னுடன் கொண்டு போகுந் தருணத்தில், அநுமான் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து, எதிரிகளை வீழ்த்தி இலட்சுமணரை அவர்கள் கையிலிருந்தும் விடுவித்து யுத்தகளத்திலிருந்து அழைத்துச் சென்ருன்.

பிறகு இராமரும் இராவணனும் கைகலந்தனர். இராமர் சரமாரி பொழிந்து இராவணனுடைய இரதத்தின் குதிரைகளைத் தொலைத்துப் பல அம்புகளால் அவனைக் காயப்படுத்தினுர். இராவணன் தோல்வியுற்று இலங்கைக்குத் திரும்பிச் சென்ருன். பிறகு, இந்தச் செய்திகளையெல்லாம் கும்பகர்ணனுக்குச் சொல்லி அனுப்பினுன்.

## கும்பகர்ணன் வதம்

கும்பகர்ணனென்பவன் இராவணனது சகோதரன். பெருந் தூக்க முள்ளவன். இலங்கையில் இவ்வளவு அமர்க்களம் நடந்துகொண்டிருந்தும் அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. அவன் இன்னும் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் காதண்டை அரக்கர் எல்லோரும் பெரிய பெரிய நகராக்களையும் பயங்கரமான வாத்தியங்களையும் முழங்கச் செய்தார்கள். அப்பொழுதுதான் அவன் மெல்லக் கண்ணைத் திறந்து எழுந்து பார்த்தான். பிறகு என்ன செய்தி யென்று விசாரிக்கலானுன். எல்லா

விஷயங்களையும் சரிவரக் கேட்டுக் கொண்டு இராவணனிடம் சென்றான். காரணமின்றிச் சீதையைக் கவர்ந்து வந்து பெருந் துன்பத்திற்கு ஆளானதற்காக அவனைக் கோபித்தான். சீதையை விட்டுவிடும்படியும் சொன்னான். இராவணன் அதையொன்றும் கேட்கவில்லை.

பிறகு கும்பகர்ணன் ஆயுதபாணியாய் வானர சேனையின்பேரில் படையெடுத்துச் சென்றான். அவன் அங்கதனையும், அநுமானையும் காயப்படுத்திவிட்டு, சுக்கிரீவனைப் பின்கட்டாகக் கட்டி இலங்கைக்குக் கொண்டுபோக முயன்றான். அப்பொழுது சுக்கிரீவன் தந்திரமாய்த் தன்னை விடுவித்துக்கொண்டு, கும்பகர்ணனுடைய காதையும் மூக்கையும் பறித்து ஓடி வந்து விட்டான். கும்பகர்ணன் கோபங் கொண்டு மறுபடியும் யுத்தத்திற்கு வந்து, முதலில் இலட்சுமணருடனும், பின்பு இராமருடனும் பொருது கடைசியில் போர்க்களத்தில் வீழ்ந்து உயிர் துறந்தான். அவனுக்குப் பிற்பாடு வந்த மகோதரன், நராந்தகன் என்னும் அரக்கர் இருவரையும் முறையே நீலனும், அங்கதனும் மாய்த்தனர். இராவணனுடைய மகனாகிய அதிகாயனை இலட்சுமணர் கொன்றார்.

## இந்திரஜித்தின் வதம்

இராவணனுடைய பெரும் போர்வீரர்களெல்லாம் மடிந்து விட்ட செய்தியை இந்திர

ஜித்து அறிந்தான். அவனுக்குக் கோபம் அதி கரித்தது. உடனே போர்க்குப் புறப்பட்டுச் சுக்கிரீவன், அங்கதன், ஜாம்பவான் இவர்களை வீழ்த்தி மூர்ச்சையடையச் செய்தான். மறைந்து போர்புரிந்து இராம லட்சுமணர்களையும் மூர்ச்சை யடையச் செய்தான். அப்பொழுது இராமருடைய வீரர்கள் யாவரும் இறந்து போய் விட்டார்களென்று நினைத்து இந்திர ஜித்து இலங்கைக்குத் திரும்பினான்.

இப்பொழுது அநுமானும் விபீஷணனும் தம் சேனையில் எந்தெந்த வீரர்கள் இறந்துவிட் டனர்களென்று பார்க்க வந்தனர். ஜாம்பவான் முதலியவர்கள் காயப்பட்டுக் கிடப்பதைக் கண் டனர். அக் காயத்தை ஆற்றும்பொருட்டு அநு மான் பச்சிலைமருந்து கொண்டுவருவதற்காகப் பாற்கடலின் மத்தியில் இருக்கும் மஹோதய மலைக்குச் சென்றான். அவ்விடத்தில் அனேக விதமான மரங்களும் செடி கொடிகளும் நிறைந்து அடர்ந்த காடுகளிருந்தன. அதில் எந்தச் செடி வேண்டுமென்பது தெரியாத தினால், அவன் மலையின் சிகரத்தையே பிடுங்கி வந்து வேண்டிய மருந்துகளை எடுப்பித்துக் கொண்டு மறுபடியும் அச்சிகரத்தை இருந்த விடத்தில் கொண்டுபோய்ப் போட்டுவிட்டான்.

இவ்வாறு வானர சேனைகள் மறுபடியும் உயிர்த்தெழுந்தன. அநுமான் அச் சேனை

களைத் திரட்டிக்கொண்டு போர்புரியலாயினான். அப்பொழுது இந்திரஜித்து அவர்களை அழிக்கும்பொருட்டு ஒரு வேள்வி செய்ய ஆரம்பித்தான். இந்த வேள்வி இடையூறின்றி முடிந்தால் இந்திரஜித்தை வெல்ல யாராலும் முடியாது. ஆகையினால் விபீஷணன் சொல்லைக் கேட்ட இராமர், அந்த வேள்விக்கு இடையூறு விளைவிக்கும் பொருட்டு இலட்சுமணரை அனுப்பினார். இலட்சுமணர் அநுமானுடைய தோளில் ஏறிக்கொண்டு போய் இந்திரஜித்தினுடைய வேள்விக்கு இடையூறு விளைவித்தார். இந்திரஜித்து கோபங்கொண்டு இலட்சுமணரைக் கொல்லப் போர்க்கு எழுந்தான். இருவருக்கும் பயங்கரமான போர் நடந்தது. கடைசியில் இலட்சுமணர் இந்திரஜித்தை எமனுலகுக்கு அனுப்பினார்.

## இராவணன் வதம்

இந்திரஜித்து இறந்துவிட்டானென்கிற செய்தியைக் கேட்டு இராவணன் துக்கத்தினால் மிகவும் வருந்தினான். பின் "வலியவர்களாகிய சுற்றத்தாரையும் புதல்வர்களையும் கொன்ற பகைவர்களைக் கொல்லாமல் இனி இலங்கை செல்வதில்லை" என்று தனக்குள் நிச்சயித்துக் கொண்டு போர்க்களத்தில் பெரும் சேனையுடன் போர்புரியத் தொடங்கினான். இராமரை எதிர்த்துப் பயங்கரமான சரமாரி பொழிந்தான்.

அதைக்கண்டு வானரர்களெல்லாம் பயந்து நடுங்கலானார்கள். அதே சமயத்தில் இலட்சுமணர் பேரில் ஒருவேலாயுதம் பாய்ந்தது. அவர் மூர்ச்சையடைந்து கீழே விழுந்தார். அப்பொழுது அநுமார், மஹோதய மலைக்குச் சென்று சஞ்சீவகரிணி என்னும் மூலிகையைக் கொணர்ந்தார். அம் மூலிகையினால் இலட்சுமணர் மூர்ச்சை தெளிந்து எழுந்தார்.

இராமரோடு இராவணன் தொடங்கிய போர் மிகவும் பயங்கரமாக நடந்தது. ஏழு தினங்கள் வரையில் அம்புகளினால் ஆகாயம் நிறைந்து விட்டது. இருபக்கத்திலும் ஆயிரக் கணக்கான போர்வீரர் அடியுண்டு இறந்தார்கள். இரத்த வெள்ளம் பெருகிக் கடலிற் பாய்ந்தது. அதனால் இலங்கையின் அருகில் இருந்த உப்புநீர்க் கடல் இரத்தக் கடலாக மாறிற்று. அவ்வளவு அகோரமாய்ச் சண்டை நடந்தது. கடைசியாய் இராமர் ஏவிய பாணங்களால் இராவணன் கீழே விழுந்து இறந்தான்.

அப்பொழுது தேவர்களும், முனிவர்களும், மானிடரும் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் கங்கு கரை யில்லை. வானர சேனையில் உண்டான வெற்றி முழக்கமும், அமளி குமளியும், ஆரவாரமும் எட்டுத் திசைகளிலும் சென்றன. இராமலட்சுமணர்களின்மீது வானவர் மலர்மாரி தூவினர். முனிவர் அவர்களை ஆசிர்வதித்தனர்.

மானிடர் வாழ்த்தினர். வானரர்கள் அவர்களின் பாதங்களைப் பணிந்துக் கூத்தாடிக் கொண்டாடினர். இலங்கை நகர் எங்கும் அழுகை யொலியே யாகி அல்லோல கல்லோலப் பட்டது.

இராவண வதத்தின் பின்பு இராமர் இலங்கையின் அரசுரிமையை விபீஷணனுக்கு அளித்து மகுடஞ் சூட்டினார்.

## சீதையை மீட்டல்

பிறகு, இராமர் அசோக வனத்திலிருக்கும் சீதாபிராட்டியாரை அழைத்துவர உத்தரவு இட்டார். உடனே விபீஷணன் ஏவலின்படி தாதியர் பிராட்டியாரை நீராட்டி, ஆடையணிகளால் அலங்கரித்து இராமபிரான் முன் அழைத்து வந்தனர்.

உடம்பினின்றும் பிரிந்துபோன உயிர் மீளவும் திரும்பி வந்ததைப்போல இராமரும் சீதையும் ஒருவரோடொருவர் சந்தித்துப் பெரும் மகிழ்ச்சி கூர்ந்தனர்.

பிறகு வனவாசம் செய்யவேண்டிய வருடங்கள் பதினான்கும் கடந்துவிட்டபடியினால், சீதையுடன் புஷ்பக விமானம் ஏறி இராமலட்சுமணர்கள் அயோத்தி மா நகரை நாடிச் செல்லலானார்கள். செல்லும்பொழுது வழிகளில் காணப்படும் விசேடமான இடங்களையும்,

சிறந்த நதிகளையும் இராமர் சீதைக்குக் காட்டினர். தாங்கள் வனத்தில் சஞ்சரித்த பொழுது இன்ன இன்ன இடத்தில் இன்ன இன்ன சம்பவங்கள் நேர்ந்தனவென்பதையும் அவளுக்குத் தெரிவித்து அயோத்தியை நெருங்கவே, தங்கள் வருகையைப் பரதருக்குத் தெரிவிக்கும்படி அநுமானை அனுப்பினர்.

இராமருடைய வரவை அறிந்த பரதனுக்குண்டான சந்தோஷத்தை நமது ஒரு நாவினல் எடுத்துக் கூறமுடியுமா? ஆயிரம் நாவையுடைய ஆதிசேடனலும் சொல்லி முடியாது. இராமர், இலட்சுமணர், சீதை, கௌசல்யை, சுமத்திரை, கைகேயி, பரதர், சத்துருக்கனர் அனைவரும் ஒருவரையொருவர் அன்புடன் கலந்து மட்டற்ற மகிழ்ச்சியுற்றனர். பரதன் கைகளைக் கூப்பி வணங்கி இராஜ்யத்தை அங்கீகரிக்கும்படி இராமரைப் பிரார்த்தித்தான். இராமர் பரதனைத் தழுவிக்கொண்டனர். பிறகு வசிஷ்ட முனிவர் இராமருக்கு மகுடம் சூட்டினர்.

இராமர் பட்டாபிஷேகம் வெகு ஆடம்பரத்துடன் நடந்தேறியது. சர்வலோகங்களும் களிகூர்ந்தன. மனுகுலத்தவராகிய தமது முன்னேர் ஆண்ட முறை தவருமல் இராமபிரான் அரசு செலுத்தி உலகத்தைக் காத்து வந்தார்.

---

# 7. உத்தர காண்டம்

[இராமரது வரலாற்றின் பிற்பகுதியைக் கூறுவதால் இதற்கு உத்தர காண்டமென்று பெயர்.]

இராமபிரான் தமது இராணியாகிய சீதா பிராட்டியாரோடு அரசு செலுத்திவந்தார். இவ்வாறு சிலகாலம் சந்தோஷமாகக் கழிந்தது. இப்பொழுது சீதாபிராட்டி கர்ப்பவதியானாள். ஓர் நாள் இராமபிரான், இலங்கையி லிருந்து பிராட்டியைத் தாம் அயோத்திக்கு அழைத்து வந்ததைப்பற்றி ஜனங்கள் குறை கூறுகின்றன ரென்றும், அதை நீக்கும் பொருட்டு பிராட்டி யைக் கானகத்தில் விட்டுவரும்படியும் இலட்சு மணருக்கு உத்தரவிட்டார்.

இராமபிரான் உத்தரவுப்படி சீதாபிராட்டி வனத்தில் விடப்பட்டாள். அங்கு வான்மீகி முனிவர் என்பவரின் ஆசிரமம் இருந்தது. அங்கு வந்த அவ்வான்மீகி முனிவர், காட்டில் தனித்து விடப்பட்டுத் திசைகாணாது தவித்துக் கொண்டிருக்கும் கர்ப்பிணியாகிய சீதையைக் கண்டார். மனம் இரங்கிச் சீதாபிராட்டியைத் தம்முடைய ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்று, தாம் பெற்ற பிள்ளையைப்போல் பாவித் துப் போற்றிவந்தார்.

சில மாதங்களுக்குப் பின் பிராட்டி கரு வுயிர்த்தாள். இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன. அக் குழந்தைகளுக்குச் செய்ய

வேண்டிய சடங்குகளை யெல்லாம் உரிய காலங்களில் அம் முனிவர் செய்வித்தார். அவர்களில் மூத்தவனுக்குக் குசன் என்றும், இளையவனுக்கு இலவன் என்றும் பெயரிட்டார்.

கல்வி கற்கும் பருவம் வந்தபொழுது அவ் வான்மீகி முனிவரே அவர்களுக்கு ஆசிரியராக விருந்து எல்லாக் கலைகளையும் கற்பித்தார். அதற்கு முன் தாம் எழுதியிருந்த இராம சரிதமாகிய இராமாயணத்தை அவர்களுக்குக் கற்பித்து வைத்தார். அவர்கள் ஒவ்வொரு சுலோகங்களையும் சங்கீத முறைப்படி இனிய குரலுடன் பாடுவார்கள். ஆனால் அதில் சொல்லப்படும் கதை யாருடையதென்பது இச் சிறுவர்களுக்குத் தெரியாது.

அச்சமயத்தில் அயோத்தியில் இராமபிரான் அசுவமேத யாகம் தாம் நடத்துவதாக அனைவருக்கும் தெரிவித்திருந்தார். அதை அறிந்த வான்மீகி முனிவர் குசலவரோடு அங்குப் போகத் தாமும் புறப்பட்டார்.

அசுவமேத யாகம் சிறப்பாய் நடந்து கொண்டிருந்தது. அரசர்களும்,முனிவர்களும், அந்தணர்களும் கூட்டங் கூட்டமாய்த் தங்கியிருந்தனர். அந்தச் சபையில் வான்மீகி முனிவர் தமது மாணாக்கர்களாகிய குசலவர்களுக்குத் தாம் கற்பித்திருந்த இராமாயணத்தைப்

பாடும்படி ஏவினர். அவர்கள் தங்கள் இனிய குரலால் இசை வழுவாமல் பாடத் தொடங்கினர்.

அங்கு வந்திருந்த அனைவரும் அச் சிறுவர்களின் கானங்களை மிகவும் விரும்பிக் கேட்டுக்கொண்டிருந்தனர். இராமபிரானும் அங்கு வந்தார். சிறுவர்கள் பாடுவது தமது சரித்திரமாக இருப்பதை யறிந்தார். அச் சிறுவர் இருவரும் இராமபிரானின் சாயலாக இருப்பது பற்றிச் சபையிலிருந்தவர்கள் ஐயமுற்றனர். பிறகு இராமபிரான் அவர்களை நோக்கி அவர்கள் யாரென்றும், தாங்கள் பாடும் சுலோகங்களை யாரிடத்திலிருந்து கற்றனரென்றும் வினவினர்.

“ நாங்கள் வான்மீகமுனிவரின் மாணாக்கர்கள். இந்தச் சுலோகங்க ளெல்லாம் அவர் எமக்குக் கற்பித்தவை ” என்று அவர்கள் விடை அளித்தனர். அனைவரும் வியப்புற்று வான்மீக முனிவரை அடைந்து அச் சிறுவர்களைப்பற்றி வினவ, அவர் “இவர்கள் இராமரது புத்திரர்கள்” என்று செய்தியை விளக்கமாக உரைத்தார்.

இராமபிரான் ஏவலின்படி சீதாபிராட்டியார் காட்டிலிருந்து அழைத்து வரப்பட்டார். அசுவமேத யாகத்திற்கு வந்திருந்த அனைவரும் அவரைப் பார்த்த வண்ணமாக இருந்

தனர். வான்மீக முனிவர் பிராட்டியின் கற்பின் மாட்சியை எடுத்துக் கூறினார்.

அப்பொழுது அச்சபையின் முன்வந்து நின்ற சீதாபிராட்டி, “ எனது கற்பில் யாதொரு களங்கமுமில்லை. நான் முற்றிலும் தூய்மை யானவளே ; இது உண்மையாயின் இப் பூமிதேவி எனக்குச் சான்று பகரக் கடவள் ” என்று பூமியை மிதித்தாள். உடனே பூமி பிளந்தது. “ மகளே ! வா ” என்று ஒரு குரல் கேட்க, சீதாபிராட்டி பூமிக்குள் சென்று மறைந்துவிட்டாள்.

இதனை யறிந்த அனைவரும் வருத்த முற் றனர். இராமபிரான் பெரிதும் கலக்க முற்ற வராய் அசுவமேத யாகத்தை முடித்துத் தமது குமாரர்களாகிய குசலவர்களுக்குப் பட்டம் கட்டிவிட்டுத் தாம் தமது சகோதரர்களோடு சரயு நதியில் இறங்கி மறைந்தனர்.

குசலவர்கள் தங்கள் முன்னோர் செலுத்திய செங்கோல் முறைவழியே அரசுசெலுத்தி உலகைக் காத்து வந்தார்கள்.

THE ROYAL PRINTING WORKS, MOUNT ROAD, MADRAS.

## கோகலே தமிழ் வாசகங்கள்

| | | | |
|---|---|---|---|
| கோகலே தமிழ் வாசகம் | I—1-ம் | வகுப்பிற்கு | 0-2-0 |
| ஷை | II—2-ம் | ,, | 0-3-0 |
| ஷை | III—3-ம் | ,, | 0-4-0 |
| ஷை | IV—4-ம் | ,, | 0-5-0 |
| ஷை | V—5-ம் | ,, | 0-6-0 |
| ஷை | VI—6-ம் | ,, | 0-7-0 |
| ஷை | VII—7-ம் | ,, | 0-8-0 |
| ஷை | VIII—8-ம் | ,, | 0-9-0 |

கோகலே **6, 7, 8-ம்** வாசகங்களுக்குத் துணைப்புத்தகங்கள் முறையே விலை அணு 4, 5, 5.

---

## பாலர் தமிழ் வாசகங்கள்

| | | | |
|---|---|---|---|
| பால சிக்ஷை | I—1-ம் | வகுப்பிற்கு | 0-2-0 |
| பாலர் தமிழ் வாசகம் | II—2-ம் | ,, | 0-3-0 |
| ஷை | III—3-ம் | ,, | 0-4-0 |
| ஷை | IV—4-ம் | ,, | 0-5-0 |
| ஷை | V—5-ம் | ,, | 0-6-0 |

## செய்யுள் மலர்

| | | |
|---|---|---|
| உலகநீதி | மூலமும் உரையும் | 0-0-9 |
| ஆத்திசூடி | ,, | 0-1-3 |
| கொன்றைவேந்தன் | ,, | 0-1-0 |
| வெற்றிவேற்கை | ,, | 0-1-3 |
| வாக்குண்டாம் | ,, | 0-1-6 |

Printed at The Royal Printing Works, Mount Road, Madras.